படிக்கிறார்கள் என்றால் இன்னொரு பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்த இங்கிருந்து 50 மாணவர்கள் பிரிந்துபோய், இங்கே 50, அங்கே 50 என்கிற போது இங்கே முன்பு இருந்த ஆசிரியர் பாதிக்கப்படுவதும் ஏற்படுகிறது. ஆகவே தான் எல்லா வசதிகளையும் உத்தேசித்து ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்து ஒரு மைல் தூரத்திற்குள்ளாக இன்னொரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த அனுமதி அளிப்பதில்லை.

* 500. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதியதாக ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு ஆரம்பக் கல்வி இயக்குநர் அனுமதி பெற வேண்டும் என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், இம் முறை எப்பொழுதிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1964-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கி. பொன்னுமலை : பல கிராமங்களில் புதிய பள்ளிக்கூடங்களுக்கு நாம் அனுமதி கொடுத்துக்கொண்டே போகிறோம். பழைய பள்ளிக்கூடங்களை மராமத்து செய்வதில்லை. ஆகவே பழைய பள்ளிக்கூடங்களை முறையாக மராமத்து செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான நிதி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய 14 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்கள் நல்ல கட்டிடங்களில்தான் இருக்கின்றன. 7 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்களுக்குத்தான் கட்டிடம் இல்லை. அவை எல்லாவற்றுக்கும் கட்டிடம் அமைத்துக் கொடுக்க 8 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடத்தில் அதைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முன்பு ஒரு துவக்கப்பள்ளிக்கு 4 ஆயிரம் ரூபாய் அரசு மானியமும், ஊராட்சி ஒன்றியங்கள் 8 ஆயிரம் ரூபாய் ஈட்டுத் தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி 8 ஆயிரம் ரூபாயை அரசு மானிய

மாகக் கொடுப்பது என்றும், ஊராட்சி ஒன்றியம் 4 ஆயிரம் ஈட்டுத் தொகை கொடுப்பது என்று ஏற்படுத்தியிருக்கிறோம். பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களின் நிதியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல நர்சரி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றில் படிக்கும் மாணவர்களை மேலே சேர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தைப் பொறுத்தவரை துவக்கப்பள்ளிகளைத்தான் ஏற்படுத்துகின்றன. நர்சரிகள் தனியார்களிடம் விடப்படுகின்றன. அங்கே படிக்கின்ற மாணவர்களை மேலே சேர்ப்பதில் சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மிட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

*501 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடித் தொகுதி மிட்டூரில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து அப்பள்ளி கட்டடக் குழுவினரால் 1971 ஜூலை திங்களில் வசூல் செய்யப்பட்ட பணம் தொடர்பாக புகார் முறையீடொன்று அமைச்சரிடம் கொடுக்கப்பட்டதா ?

(இ) இது தொடர்பாக அரசு விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கின்றதா ?

(உ) ஆமெனில், அவைகளின் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பள்ளி கல்வி இயக்குநரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை

*502 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பழங்கால வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் புதை பொருட்கள், ஆகியவற்றினைக் கண்டறிய தொல்பொருள் ஆய்வுப் பிரிவில் சிறப்புப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?